செயற்பொறியாளர் அலுவலகம், பொபது., கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்டம், திருவள்ளூர், அவர்களின் செயல்முறை ஆணை

முன்னிலை:-பொறி.பி.ஸ்ரீதர்,பி.இ.,

செயல்முறை ஆணை எண்.நிஎ1/1337/2021/நாள்: 29.11.2021

பிலவ/ஐப்பசி-13, திருவள்ளுவர் ஆண்டு 2052

பொருள்: பணியமைப்பு – பொபது – தமிழ்நாடு அமைச்சுப் பணித்தொகுதி – திருமதி.க.நித்யா, இளநிலை உதவியாளர் – தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக பணி நியமனம்-இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்தல் மற்றும் தகுதிகாண்பருவம் துவக்கி ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:

1. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடித எண்.2496/PSD-1/2020 நாள்:29.05.2020
2. முதன்மை தலைமைப் பொறியாளர், நீஆது., மற்றும் தலைமைப் பொறியாளர்(பொது) சேப்பாக்கம், சென்னை-5 அவர்களின் செயல்முறை ஆணை எண்.எஸ்.3(3)/ 35935/2020/ நாள்:17.07.2020
3. இக்கோட்ட செயல்முறை ஆணை எண்.நிஎ1/969 /2020 நாள் 21.09.2020.
4. உதவி செயற்பொறியாளர், பொபது, கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) உபகோட்டம், பொன்னேரி அவர்களின் கடித எண். உ. செ. பொ. / பொன்னேரி/ கோ. 120/ 2021 / நாள் 01.11.2021

******

**ஆணை:-**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணயத்தால் நடத்தப்பெற்ற 2018-2019 மற்றும் 2019-2020-ம் ஆண்டுகளுக்கான ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளுக்கான தொகுதி IV தேர்வின் வாயிலாக தெரிவு செய்யப்பட்டு பார்வை 2 மற்றும் 3ல் காணும் செயல்முறை ஆணைகளின்படி கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) உபகோட்டம், பொன்னேரி அலுவலகத்திற்கு இளநிலை உதவியாளராக பணியமர்வு செய்யப்பட்ட திருமதி.க.நித்யா, அவர்கள் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 23.09.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

மேலும் தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-ன்படி உள்ள பிரிவு 28(1)-ன்படி தமிழ்நாடு அரசு பணிகளின்கீழ் இளநிலை உதவியாளராக பணிவரன்முறை செய்யப்பட்ட நாளான 23.09.2020 முற்பகல் முதல் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார்.

உண்மை நகல்

24/4/23

உதவி செயற் பொறியாளர் பொ.ப.து
கட்டிடம் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு
உப கோட்டம், பொன்னேரி-601 204

24/4/23.

தனியர் தகுதிகாண் பருவத்தினை 23.09.2020 முற்பகல் தொடங்கி, இரண்டாண்டு தகுதிகாண் பருத்தினை மூன்றாண்டு தொடர் பணியில் முடிக்க வேண்டும்.

மேலும், தனியர் தகுதிகாண் பருவ காலத்தில் பவானிசாகர் பயிற்சி நிலையத்தில் நடத்தப்படும் அரசு அலுவலர்களுக்கான அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற வேண்டும் எனவும் தெரிவித்து ஆணை வழங்கப்படுகிறது.

மேற்காணும் பணிவரன்முறை ஆணை சென்னை உயர்நீதிமன்றம், சென்னை மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் 2018-2019 மற்றும் 2019-2020-ம் ஆண்டுகளுக்கான ஒருங்கிணைந்த குடிமைப் பணிக்களுக்கான தொகுதி IV தேர்வுகள் தொடர்பாக தொடுக்கப்பட்ட வழக்குகளில் வழங்கப்படவுள்ள தீர்ப்புக்கு உட்பட்டது என்ற நிபந்தனையுடன் வழங்கப்படுகிறது.

29/11/21

செயற்பொறியாளர், பொபது.,
கட்டட (க(ம)ப) கோட்டம்,
திருவள்ளூர்.

மா.நா
29/11/2021

பெறுநர்:-

திருமதி.க.நித்யா, இளநிலை உதவியாளர்
வழி:- உதவி செயற்பொறியாளர், பொபது, கட்ட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) உபகோட்டம், பொன்னேரி.

நகல்:- உதவி செயற்பொறியாளர், பொபது, கட்ட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) உபகோட்டம், பொன்னேரி அவர்களுகக்கு தகவலுக்காகவும், தக்க மேல் நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது.